தரம் - 12

# முதலாம் தவணை

# தமிழ்

சிறுகதை



# தியாகம்

## கு. அழகிரிசாமி


எம். அப்துல் றஸாக்
**B,A (Hons), PGDE, M.Phil**
Ak/As-Siraj Maha vidyalaya (N/S)
Akkaraipattu

# கு. அழகிரிசாமி – அறிமுகம்

- கு. அழகிரிசாமி அவர்கள் இந்தியாவில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள இடைச்சேவல் என்னும் கிராமத்தில் 1923 இல் பிறந்தவர். ‘உறக்கம் கொள்ளுமா?’ என்பது இவரது முதற்கதையாகும். இவர் சிறுகதை, நாவல், கட்டுரை, மொழிபெயர்ப்பு, மேடை நாடகங்கள், கீர்த்தனைகள் ஆகிய பல்துறைத் திறனுடையவராகத் திகழ்ந்தார்.

- தமிழ்நேசன் (மலேசியா), சக்தி, சோவியத்நாடு, பிரசண்ட விகடன், ஆகிய பத்திரிகைகளில் இவர் பணியாற்றினார். 1970 இல் இவரது இறப்புக்குப் பின் ‘அன்பளிப்பு’ என்னும் சிறுகதைத் தொகுதிக்கு இந்திய அரசின் சாகித்திய அகடமி விருது கிடைத்தது.

- இவரால் படைக்கப்பட்ட ‘தியாகம்’ என்னும் இலக்கியத் தரம் வாய்ந்த சிறுகதை எமக்குத் தரப்பட்டுள்ளது. கற்பனை, படைப்பாற்றல், மனோபாவ அலசல் ஆகியவை இச்சிறுகதையில் சிறப்பாக சித்திரிக்கப்பட்டுள்ளன.

# தியாகம் – சிறுகதை பற்றிய அறிமுகம்

- கோவில்பட்டி கிராமத்தில் மளிகைக்கடை அதாவது பலசரக்குக் கடை வைத்திருக்கும் கதிரேசன் செட்டியார், அங்கு வேலை செய்யும் பையன்களுடன் வெளிப் பார்வைக்கு மிகவும் கடுமையானவராகவும், கொடுமையான வராகவும் தன்னைக் காட்டிக்கொள்கின்றார். அதேவேளை, மறுபுறத்தில் அந்தப் பையன்கள் எதிர்காலத்தில் நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் வரவேண்டுமென்ற விருப்பத்தோடும் அவர்களின் நலன்களில் அக்கறையும் கொண்டும் செயற்படுகின்றார். தினமும் அவர்களுடன் கத்திக் கத்தி ஏசுவதால் தனது உடல் நலத்தையும் பொருட் படுத்தாது தியாகம் செய்பவராகவும் விளங்குகின்றார். இவற்றை தத்ரூபமாக வெளிப்படுத்துவதே ‘தியாகம்’ என்கின்ற கதை கூறும் செய்தியாகும்.

## 1. கதையில் இடம்பெறும் பாத்திரங்களைத் தொடர்புபடுத்துக.

| | |
|---|---|
| 1. கதிரேசன் செட்டியார் | சிப்பந்திகள் |
| 2. சோமசுந்தரம் பிள்ளை | கணக்கு எழுதுபவர் |
| 3. சண்முகம் பிள்ளை | மளிகைக் கடை முதலாளி |
| 4. முருகையா, வெங்கடாசலம் | கதிரேசன் செட்டியாரது நண்பர் |

# 1. விடை

| | |
|---|---|
| 1. கதிரேசன் செட்டியார் | சிப்பந்திகள் |
| 2. சோமசுந்தரம் பிள்ளை | கணக்கு எழுதுபவர் |
| 3. சண்முகம் பிள்ளை | மளிகைக் கடை முதலாளி |
| 4. முருகையா, வெங்கடாசலம் | கதிரேசன் செட்டியாரது நண்பர் |

**2. பிரதான கதை நிகழ்களம், துணைக் களம் என்பன முறையே காட்டப்படும் தொகுதி யாது?**

1. வீடு, கோயில்
2. தோட்டம், வீடு
3. மளிகைக்கடை, வீட்டுக்குச் செல்லும் பாதை
4. சந்தை, கோயில்

# 2. விடை

1. வீடு, கோயில்

2. தோட்டம், வீடு

3. மளிகைக்கடை, வீட்டுக்குச் செல்லும் பாதை

4. சந்தை, கோயில்

## 3. தியாகம் சிறுகதையின் கதைப்பின்னல் ஒழுங்கின்றி தரப்பட்டுள்ளது. அதனை ஒழுங்குபடுத்தி எழுதுக.

- கதிரேசன் செட்டியார் கடைப்பையன்களை காரணம் தேடி ஏசுதல், அவரது கடுமையான போக்கு என்பனவற்றைக் காட்டுவதாக கதை நகர்த்தப்படல்

- கதையின் இறுதியில் கதிரேசன் செட்டியாரது கடுமைக்கான காரணம் புலப்படுத்தப்படும் வகையில் நிறைவு செய்யப்படல்

- கதிரேசன் செட்டியார் பற்றிய அறிமுகத்துடன் கதை ஆரம்பமாதல்

# 3. விடை

- கதிரேசன் செட்டியார் பற்றிய அறிமுகத்துடன் கதை ஆரம்பமாதல்
- கதிரேசன் செட்டியார் கடைப்பையன்களை காரணம் தேடி ஏசுதல், அவரது கடுமையான போக்கு என்பனவற்றைக் காட்டுவதாக கதை நகர்த்தப்படல்
- கதையின் இறுதியில் கதிரேசன் செட்டியாரது கடுமைக்கான காரணம் புலப்படுத்தப்படும் வகையில் நிறைவு செய்யப்படல்

**4. கதைகூறும் பாங்கு பற்றி பல தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றினை அவதானித்து சரி, பிழை கூறுக.**

- கதிரேசன் செட்டியாரே கதை கூறுவதாக விளங்குதலும் அவரது பார்வையிலேயே கதை நகர்த்திச் செல்லப்படலும் (        )
- பாத்திரங்களின் உரையாடல்களினூடாக அவர்களின் குணப் பண்புகள் வெளிப்படுத்தப்படல் (        )
- கடுமையானவராக கதையின் முற்பகுதியில் சித்திரிக் கப்பட்டவரிடம் உள்ள நல்லியல்புகள் கதையின் இறுதிப் பகுதியில் காட்டப்பட்டிருப்பது சிறப்பான கதைத் திருப்பமாக காணப்படுகின்றமை (        )

- கதையின் ஆரம்பத்தில் இருந்து இறுதிவரை பல இடங்களில் சுவாரஷ்யக் குறைவு ஏற்படல் ( )

- விபரணப் பாங்கில் பாத்திரங்களையும் கதைக் களத்தையும் எடுத்துரைத்தல் ( )

- கதையில் நிகழும் உரையாடல்களில் நியம வழக்குச் சொற்களையே கையாளுதல் ( )

- கதிரேசன் செட்டியாரின் தியாகத்தை வெளிப்படுத்த சண்முகப்பிள்ளை என்ற பாத்திரத்தை உத்தியாகக் கையாளுதல் ( )

- கதிரேசன் செட்டியாரின் நடத்தைகளை உணர்வுச் செறிவற்ற மொழிநடையில் காட்சிப்படுத்துதல் ( )

# 4. விடை

- கதிரேசன் செட்டியாரே கதை கூறுவதாக விளங்குதலும் அவரது பார்வையிலேயே கதை நகர்த்திச் செல்லப்படலும் ( பிழை )

- பாத்திரங்களின் உரையாடல்களினூடாக அவர்களின் குணப் பண்புகள் வெளிப்படுத்தப்படல் ( சரி )

- கடுமையானவராக கதையின் முற்பகுதியில் சித்திரிக் கப்பட்டவரிடம் உள்ள நல்லியல்புகள் கதையின் இறுதிப் பகுதியில் காட்டப்பட்டிருப்பது சிறப்பான கதைத் திருப்ப மாக காணப்படுகின்றமை ( சரி )

- கதையின் ஆரம்பத்தில் இருந்து இறுதிவரை பல இடங்களில் சுவாரஷ்யக் குறைவு ஏற்படல் ( பிழை )

- விபரணப் பாங்கில் பாத்திரங்களையும் கதைக் களத்தையும் எடுத்துரைத்தல் ( சரி )

- கதையில் நிகழும் உரையாடல்களில் நியம வழக்குச் சொற்களையே கையாளுதல் ( பிழை )

- கதிரேசன் செட்டியாரின் தியாகத்தை வெளிப்படுத்த சண்முகம்பிள்ளை என்ற பாத்திரத்தை உத்தியாகக் கையாளுதல் ( சரி )

- கதிரேசன் செட்டியாரின் நடத்தைகளை உணர்வுச் செறிவற்ற மொழிநடையில் காட்சிப்படுத்துதல் ( பிழை )

## 5. தியாகம் கதையின் மொழிநடை குறித்த கூற்றுக்களுள் தவறானதை தெரிவு செய்க.

- தமிழ் நாட்டிற்குப் பரிச்சயமான மொழிநடையைப் பயன்படுத்தி கதை அமைக்கப்பட்டுள்ளது.
- சிறிய வாக்கியங்களுடன் உரையாடற் பாங்கான பேச்சுமொழிப் பயன்பாடும் கையாளப்பட்டுள்ளது.
- கேலியும் கிண்டலுமான தொனியிலான மொழிநடைப் பிரயோகத்தைக் காண முடிகிறது.
- ஆங்கிலமொழிப் பிரயோகம் கதையின் பயன்படுத்தப் பட்டுள்ளது.

# 5. விடை

- தமிழ் நாட்டிற்குப் பரிச்சயமான மொழிநடையைப் பயன்படுத்தி கதை அமைக்கப்பட்டுள்ளது.
- சிறிய வாக்கியங்களுடன் கூடிய உரையாடற் பாங்கான பேச்சுமொழிப் பயன்பாடு கையாளப்பட்டுள்ளது.
- கேலியும் கிண்டலுமான தொனியிலான மொழிநடைப் பிரயோகத்தைக் காண முடிகிறது.
- ஆங்கிலமொழிப் பிரயோகம் கதையில் பயன்படுத்தப் பட்டுள்ளது.

## 6. கதிரேசன் செட்டியார் என்ற பாத்திரப் படைப்புப் பற்றி கருத்துரைக்குக.

# 6. விடை

- சிறுகதையில் முதன்மைப் பாத்திரம்
- கதிரேசன் செட்டியார் தன் மளிகைக் கடையில் வேலை செய்யும் பையன்களுடன் கடுமையாக நடந்து கொள்பவர்
- வெளிப்பார்வைக்கு கடுமையானவராக இருந்தாலும் கடைப் பையன்கள் எதிர்காலத்தில் நல்லவர்களாகவும் வல்லவர் களாகவும் வரவேண்டும் என்ற அக்கறை கொண்டவர்
- இறை நம்பிக்கை கொண்டவர், தன் உடல்நலத்தை பொருட்படுத்தாதவர்
- தன்னைப்போல தொழிலாளரும் சிறந்து விளங்க வேண்டு மென்ற தயாள சிந்தை கொண்டவர்.

**7. கதை வளர்ச்சிக்கு சண்முகம்பிள்ளை என்ற பாத்திரம் உதவும் விதத்தைக் குறிப்பிடுக.**

# 7. விடை

- கதிரேசன் செட்டியாருடைய இரக்க குணத்தையும், தியாகத்தையும், தயாள சிந்தனையையும், ஆளுமை யையும் வெளிப்படுத்த உதவும் பாத்திரமாக அமைகின்றமை

- கதிரேசன் செட்டியாரின் உள்ளார்ந்த மனவுணர்வை வெளிப்படுத்த உதவும் பாத்திரமாக வடிவமைக்கப் பட்டுள்ளமை.

# 8. அருஞ்சொற்களுக்குப் பொருள் தருக.

- ஜோட்டு
- அஸ்திரம்
- சமுக்காளம்
- பாக்கி
- முடிச்சுமாறி
- சவடால்
- ஏதம்பதம்
- ஏகதேசம்
- சோலி
- ஜரூர்

# 8. விடை

| | | |
|---|---|---|
| ஜோட்டு | - | செருப்பு |
| அஸ்திரம் | - | அம்பு |
| சமுக்காளம் | - | போர்வை |
| பாக்கி | - | மீதி |
| முடிச்சுமாறி | - | திருடன் |

- சவடால் - ஏமாற்று
- ஏதம்பதம் - பொருத்தமாக
- ஏகதேசம் - எப்போதாவது
- சோலி - அலுவல்
- ஜரூர் - வேகமாக

## 9. கதையில் இடம்பெறும் பின்வரும் பேச்சுவழக்குச் சொற்களுக்குப் பொருள் தருக.

- பொடைச்சி
- யாவுகத்திலே
- ஈராங்காயம்
- திருளா
- தீவட்டி
- வேத்துமை
- வத்த
- சாக்குண்று
- எதுத்தில்லே
- பத்தாதா

# 9. விடை

- பொடைச்சி - புடைத்து
- யாவுகத்திலே - ஞாபகத்திலே
- ஈ·ராங்காயம் - ஈ·ரவெங்காயம்
- திருளா - திருவிழா
- தீவட்டி - தீவர்த்தி

| | | |
|---|---|---|
| • வேத்துமை | - | வேற்றுமை |
| • வத்த | - | வற்ற |
| • சாக்குண்று | - | சாட்டென்று |
| • எதுத்தில்லே | - | எதனில் |
| • பத்தாதா | - | போதாதா |



# நன்றி